V. [signature]

# கற்பகம்
KATPAKAM
திங்கள் இதழ்
விலை ரூபா 10/-

## குறளமுதம்-25

வள்ளுவர் வாய்மொழியை எத்திசைத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதைத் தரும்.

**அதிகாரம்-3 - அறத்துப்பால்-முனிவர் பெருமை**

"ஐந்து அவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலும் கரி"

*ஐம்புலன்களையும் அடக்கிய முனிவனது வலிமைக்கு வானவர் தலைவனாகிய இந்திரனே போதிய சான்று ஆவான்.*

மலர்-03 நவெம்பர்-2009 இதழ்-25

## யாழில் டிசெம்பர் 11ல்

# கூட்டுறவு பனந்தொழில் வல்லுநர்களின் மாநாடு!



வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசத்திற்கு விஜயம் செய்த பனை அபிவிருத்திச் சபை முன்னாள் தலைவரும், சமாச ஆரம்பகால செயலாளருமான க.நடராசா சமாச உபதலைவர் மாலை அணிவித்து வரவேற்பதை படத்தில் காணலாம்

கூட்டுறவு பனந்தொழில் வல்லுநர்களின் மாநாடு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 11ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமாகி நடபெறவுள்ளது.

வடமாகாண பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் த.சிவலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இம்மாநாட்டுக்கு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முதன்மை விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

எமது பிரதேசத்தின் முதுகெலும்பாக உள்ள விவசாயம், கடற்றொழில் ஆகியவற்றின் அபிவிருத்திக்கு தனியான திணைக்களங்களும். அமைச்சுக்களும் இருந்துவருவது போன்று பனை வளத்துக்கும் தனியான திணைக்களமும், அமைச்சும் நிறுவப்படவேண்டும். அதன் மூலம் பனை வ்ளத்தின் உச்சப் பயன்களையும் இத்துறை சார்ந்த தொழில் வல்லுநர்களின் உற்பத்தி திறனையும் மேம்படுத்தி, அபிவிருத்தி செய்து, அவர்களது பொருளாதார வளத்தினை பெருக்குவதே இம்மாநாட்டின் நோக்கமாகும்.

இம்மாநாட்டில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங் களின் வியாபார முன்னேற்றம், பின்ன டைவு, இவற்றுக்கான மாற்று வழிகள் குறித்தும், இச்சங்கங்களை தொழிற் றுறைமயமாக்குவதில் ஏற்படக்கூடிய முன்னேற்றம், அதற்குள்ள பிரச்சினைகள், பின்னடைவு என்பவற்றை தீர்த்து வைப்பதற்கான மாற்று வழிகளை கண்டறிதலும், இச்சங்கங்கள் நிறுவப்பட்டமையை அடுத்த சமூக ரீதியாக ஏற்பட்ட முன்னேற்றம், பின்னடைவு இவற் றுக்கான மாற்று வழிகளை கண்டறியும் ஆய்வுகளுடன் இச்சங்கங்களின் எல்லைப் பரப்பில் செயற்பட்டுவரும் பாலர் முன்கல்வி நிலையங்களின் எதிர்கால அபிவிருத்தி தொடர்பாகவும் இம்மாநாட்டில் விரிவாக ஆராயப்படவுள்ளது.

இம்மாநாட்டுக்கு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் முக்கியஸ்தர்களும் அழைக்கப்பட்டு அவர்களது ஆலோசனைகளும் பெறப்படவுள்ளது. இம்மாநாட்டின் ஏற்பாட்டாளராக முந்நாள் பனை அபிவிருத்திச் சபைத் தலைவரும், சமாசத்தின் ஆரம்பகால செயலாளருமான க.நடராசா செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.





வலிகாமம் ப.தெ.வ.அ.கூ.ச.கொத்தனி நடத்திய சர்வதேச கூட்டுறவாளர் விழாவும், நிறுவுநர் நினைவுநாள் விழாவும் கொத்தனியின் கலையரங்க மண்டபத்தில் நடைபெற்றபோது, 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவன் ஒருவருக்கு முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பரிசில் வழுங்குவதை முதலாவது படத்திலும், யாழ் மத்திய கல்லூரியில் நடைபெற்ற உள்ளூராட்சித் திணைக்கள கண்காட்சியில் சமாசத்தின் செயற்பாடுகள் குறித்து வடமாகாண கூ.ஆணையாளர் எஸ்.சுப்பிரமணியசர்மா சித்த ஆயுர்வேத பணிப்பாளருக்கு விளக்கமளிப்பதை 2வது படத்திலும் காணலாம்.

"கணக்கிலா பயன்தரு கற்பகதருபோல் கற்பகமும் பயன் தரும்"

19
1919

### சிந்தனைத்துளி

" 'இல்லை' என்று ஒருபோதும் சொல்லாதே' , 'என்னால் இயலாது' என்று ஒருநாளும் சொல்லாதே "! —சுவாமி விவேகானந்தர்—

## கற்பகக்கரு

## கூட்டுறவு பனந்தொழில் வல்லுநர் மாநாடு-2009!

காலத்தின் தேவையை அனுசரித்து பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தணி கள் ஆகியவற்றின் அனுசரணையுடன் வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் "கூட்டுறவு பனந்தொழில் வல்லுநர் மாநாடு" ஒன்றை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவது வரவேற்கத்தக்கதொரு விடயமாகும்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு", "கூடிவாழ்ந்தால் கோடி நன்மை", " கூட்டுறவே நாட்டுயர்வு", "ஒருவர் பலருக்காகவும் பலர் ஒருவருக்காவும்" கூடி உழைக்கும் புனிதமான கூட்டுறவு இயக்கத்தை வழிநடத்திச்செல்லும் கூட்டுறவாளர்களினால் நடத்தப்படவுள்ள கூட்டுறவு பனந்தொழில் வல்லுநர் மாநாடு முக்கியத்துவம் பெறுகிறது.

இம்மாநாட்டில் ப.தெ.வ.அ.கூ.சங்கங்கள், கொத்தணிகள், சமாசம் என்பன இணைந்து பனந்தொழில் வல்லுநர்களின் ஆற்றல்களை மேம்பாடடையச் செய்யும் அதி உன்னத நோக்குடன் நடத்தப்படும் இம்மாநாட்டில் பனை வளம் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு பிரகடனங்கள் வெளியிடப்படவுள்ளன.

பனந்தொழிலில் ஈடுபட்டுள்ள கூட்டுறவாளர்கள் சமகாலத்தில் அனுபவித்துவரும் , எதிர்நோக்கும் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான முக்கிய தீர்மானங்கள் இம்மாநாட்டில் எடுக்கப்படவுள்ளன. பனந்தொழிலோடு சம்பந்தப்பட்ட கூட்டுறவுத் தொழிலாளர்கள் பல்வேறுபட்ட சட்ட திட்டங்களினால் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் அனுசரணை, ஆதரவின்றி தமது செயற்திட்டங்களை முன்னெடுத்துச்செல்ல முடியாத இக்கட்டான நிலையை எதிர்நோக்கியுள்ளனர்.

ப.தெ.வ.அ.கூ.சங்கங்கள் வெறுமனே மதுபான உற்பத்தியிலும், விற்பனையிலும் ஈடுபடுவதுடன் மட்டும் நில்லாது, பனை வளத்திலிருந்து பெறக்கூடிய அனைத்து உற்பத்திகளையும் உற்பத்தி செய்து பனை வளத்தின் உச்சப்பயன்பாட்டையும் அதனோடு இணைந்துள்ள அங்கத்தவர்களது பொருளாதார மேம்பாட்டையும் அபிவிருத்தி செய்வதே இம்மாநாட்டின் முக்கிய குறிக்கோளாகும்.

பனை வளத்தின் அபிவிருத்திக்கு பனை அபிவிருத்திச் சபையும், சங்கங்களும் ஆற்றிவரும் சேவைகளுக்கு உறுதுணையாக தனியான ஒரு திணைக்களமோ, அமைச்சோ இல்லாதிருப்பது இவ்வளத்தின் பின்னடைவுக்கு முக்கிய காரணியாக உள்ளது.

விவசாயம், கடற்றொழில் துறைகளுக்கு தனியான இலாகாக்களும், அமைச்சும், பல்கலைக்கழக மட்டத்தில் பீடங்களும் இருப்பதுபோல பனை வளத்துக்கும் இவ்வாறான வசதிகள் ஏற்படுத்துவதும், இம்மாநாட்டின் பிரதான நோக்கமாக இருப்பதால் அனைத்து தரப்பினரும் இந்நோக்கத்தை நிறைவு செய்வதற்கு வேண்டிய ஒத்துழைப்பை வழங்க வேண்டியது அவர்களது தார்மீக கடமையாகும் என்பதை கற்பகம் இங்கு வலியுறுத்திக் கூறுவதுடன், மாநாடு வெற்றியடைய வாழ்த்துகின்றது.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்"

-ஆசிரியர்-



## வாய் விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்!

வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும் என்று கூறுவார்கள். இது எல்லோருக்கும் தெரிந்திருக்கும். சிலர் ஏனோ மருந்துக்குக்கூட சிரிப்பதே இல்லை. எப்போதும் முகத்தை "உம்" என்றே வைத்துக்கொண்டிருப்பார்கள். அடிக்கடி சிரித்துக்கொண்டிருப்பவர்களுக்கு நிறைய பலன்கள் கிடைக்கின்றன என்கின்றார்கள் மருத்துவர்கள்.

நாம் ஒவ்வொருவரும் உயிர்வாழ ஒட்சிசின் இன்றியமையாதது. நாம் சிரிக்கும்போது அந்த ஒட்சிசன் போதுமான அளவு உடலுக்குள் செல்லுகிறது. இதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். சிரிப்பதனால் தசைகளில் ஏற்படும் வலிகள் தவிர்க்கப்படும் மன அழுத்தம் போக்கப்படுகிறது. சிரிப்பு சமூகத்தோடு ஒன்றி மகிழ்ச்சியுடன் வாழ வழிவகை செய்கிறது. உதாரணம்:- அடிக்கடி நகைச்சுவைகளை அள்ளி விடுபவர்களை சுற்றி ஒரு கூட்டம் எப்போதும் இருந்து கொண்டேயி ருக்கும். உடல் சோர்வு தவிர்க்கப்பட்டு புத்துணர்வுடன் செயற்பட சிரிப்பு துணைபுரிகிறது.

எவ்வளவு கடினமான பணிகளை செய்தாலும் புதிய உத்வேகம் கிடைக்கும் வகையில் உடலுக்குள் தூண்டுதலை சிரிப்பு ஏற்படுத்துகிறது. இரத்த ஓட்டம் சீராக இருக்க உதவுகிறது. இருதயம் தொடர்பான நோய்கள் வருவதையும் சிரிப்பு தடுக்கிறது. இப்படிச் சிரிப்பதனால் கிடைக்கும் பலன்களை அடுக்கிக்கொண்டே போகிறார்கள் மருத்துவர்கள் இந்தப் பலன்களைப்பெற உதடுகள் மட்டும் சிரித்தால் போதாது. தினமும் 15 முறை சிரிக்க வேண்டும். அதுவும் வாய்விட்டு, வயிறு குலுங்கச் சிரிக்க வேண்டும் என்கிறார்கள் மருத்துவர்கள்.

### வெற்றியின் ரகசியம்!

"சிரமத்தை எதிர்கொள்" - என்றது யன்னல் கதவு

"எப்பொழுதும் குளிர்மையாக இரு" -என்றது காற்று

"நாளை வீணாக்காதே" - என்றது நாட்காட்டி

"நேரத்தை வீணாக்காதே" - என்றது கடிகாரம்

"உன் இதயம் என்னைப்போல் பரந்திருக்க வேண்டும்" - என்றது வானம்

"என்னைப்போல் பிறருக்கு உதவியாக இரு" - என்றது தண்ணீர்

"என்னைப்போல் எல்லாத் தீமைகளையும் அழித்துவிடு" - என்றது நெருப்பு

### தனியார்துறை நிறுவனங்கள் இளைஞரிடம் எதிர்பார்க்கும் மனிதவளத் திறன்கள்!

- ஆங்கில மொழித் தேர்ச்சி.
- தகவல் தொழில்நுட்பத் தேர்ச்சி.
- சிறந்த தொடர்பாடல் திறன்.
- தலைமை தாங்கும் திறன்.
- குழுவாக சமூகமாகப் பணியாற்றும் திறன்.
- பிரச்சினைகளை தீர்க்கும் திறன்.
- புத்தாக்க சிந்தனை.
- இடர்களை எதிர்நோக்கும் ஆற்றல்.
- புதிய கருத்துக்களை ஏற்கும் மனப்பாங்கு.

தொகுப்பு: க.ப.லோகநாதன்
சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ.ச.





யாழ்.மா.சி.ம.உ.வி.கூ.சங்கத்தின் புதிய பெயர்ப் பலகை திரைநீக்கம் செய்யப்பட்ட நிகழ்வில் கலந்துகொண்ட பொதுச்சபை பிரதிநிதிகளையும், உள்ளூராட்சி திணைக் களக் கண்காட்சியில் சங்கத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மருந்துப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதையும், அதன் முகாமைப்பணிப்பாளரையும் படங்களில் காணலாம்.

# நிகழ்வுகளின் நிழல்கள் !

## அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்











சங்கம் கடந்த 30-10-2009ல் வெஸ்ரன் யூனியன் பணப்பரிமாற்ற சேவையை தனது கிராமிய வங்கியினூடாக ஆரம்பித்தது. இந்நிகழ்வின் விருந்தினர்களுக்கு மாலை அணிவித்து வரவேற்பதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மாவட்ட கூ.அ.அலுவலர் திரு.இ.பாலச்சந்திரன் நாடா வெட்டி திறந்துவைப்பதையும், முதலாவது வாடிக்கையாளர் கூ.அ.அலுவலர் திரு.இ.விஜயமோகனராசா அவர்களுக்கு பிரதம விருந்தினர் பணத்தைக் கையளிப்பதையும், அருகில் சங்கத் தலைவர், சமாசப் பொதுமுகாமையாளர், அச்சுவேலி மத்திய கல்லூரி அதிபர், இலங்கை வங்கி அச்சுவேலிக் கிளை முகாமையாளர், அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, வெஸ்ரன் யூனியன் வடமாகாண இணைப்பாளர், மக்கள் வங்கி அச்சுவேலிக் கிளை முகாமையாளர் ஆகியோரையும் மேலுள்ள படங்களில் காணலாம்.



சங்கத்தின் அனுசரணையில் இயங்கும் அச்சுவேலி வடக்கு கதிரொளி முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி-கிழக்கு அமைப்பாளர் திரு.மா.தர்மராசா (J.P) அவர்கள் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்ப்பாணம் வலய முன்கல்வி உதவிப் பணிப்பாளர், ஆசிரியை திருமதி சா.விஜயவரதன் ஆகியோரை முதலாவது படத்திலும், இந்நிகழ்வின் விருந்தினர்கள் மாலை அணிவித்து கௌரவிக்கப்படுவதை இரண்டாவது படத்திலும், முன்பள்ளியின் பழைய மாணவி ஒருவருக்கு பிரதம விருந்தினர் அவர்கள் பரிசில் வழங்கிக் கௌரவிப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# வலிகாமம் ப.தெ.வ.அ.கூ.ச.கொத்

வலிகாமம் ப.தெ.வ.அ.கூ.ச.கொத்தணி அதன் ஸ்தாபகத் தலைவர்களான அமரர் சு.நடேசு மற்றும் அமரர் க.சந்திரராசா ஆகியோரின் நினைவுதின நிகழ்வையும், பரீட்சைகளில் வெற்றிபெற்றோருக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வையும் அண்மையில் நடத்தியது. தலைவர் க.மெய்யழகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் திரு.டக்ளஸ் தேவானந்தா அவர்களும், கௌரவ விருந்தினர்களாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தேசிய அமைப்பாளர் திரு.ப.சீவரத்தினம், மானிப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி திரு.சந்திர ஜெயவீர, கூ.உ.ஆணையாளர் திரு.பொ.சிவலிங்கம், சமாசத் தலைவர் திரு.த.சிவலிங்கம் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக கல்லால் பொறுப்பதிகாரி திரு.ந.கிருபாகரன், மா.கூ.அ.அலுவலர் இ.பாலச்சந்திரன், கூ.அ.அலுவலர் பா.சிவபாலன், சமாசப் பொது முகாமையாளர் ஜே.பி.குணரத்தினம் உட்பட மற்றும் பலரும் கலந்து கொணடனர்.

இந்நிகழ்வில் சிறந்த அங்கத்தவர், பணியாளர் 45 பேரும், ஓய்வுபெற்ற அங்கத்தவர்,பணியாளர் 09 பேரும் கௌரவிக்கப்பட்டதுடன், அங்கத்தவர், பணியாளர் பிள்ளைகளில் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் சித்தி, க.பொ.த.(சா/த), (உ/த) சித்திபெற்று உயர்கல்வி கற்போர், உயர்கல்வியில் பட்டம் பெற்றோர் ஆகியோருக்கு நிதி வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. அத்துடன் கொத்தணியின் அங்கத்துவ சங்கங்களில் சிறந்த தொழிற்பாட்டுச் சங்கங்களின் தெரிவில் முதலாவதாக கோண்டாவில் சங்கமும், 2வதாக பண்டத்தரிப்பு சங்கமும், 3வதாக தெல்லிப்பளைச் சங்கமும் தெரிவு செய்யப்பட்டன. இந்நிகழ்வை முன்னிட்டு நடத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில் வெற்றிபெற்றோருக்கான பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

## 2008ம் ஆண்டிலும் தொழிற்பட்டு ஓய்வுபெற்ற அங்கத்தவர், பணியாளர் விபரம்

### ஓய்வுபெற்ற அங்கத்தவர்

| | சங்கம் | அங்கத்தவர் |
|---|---|---|
| 01. | தெல்லிப்பளை | பசுபதி-சந்திரன் |
| | | ஐயங்கன்-கிருஸ்ணபிள்ளை |
| 02. | மானிப்பாய் | ஐயன்-மனோகரன் |
| 03. | பண்டத்தரிப்பு | சந்தியா-சிங்கராசா |

### ஓய்வுபெற்ற பணியாளர்

| | | |
|---|---|---|
| 01. | தெல்லிப்பளை | அந்தோனி-அற்புதம் |
| | | கதிர்காமு-சந்திரபோஸ் |
| 02. | சுன்னாகம் | இராஜரட்ணம்-அம்பிகாதேவி |
| 03. | சங்கானை | மாரிமுத்து-சக்திகுரு |
| 04. | கொத்தணி | கந்தையா-இராசையா |

## சிறந்த அங்கத்தவர், பணியாளர் விபரம்

### சிறந்த அங்கத்தவர்

| சங்கம் | பெயர் | கிளை/இல. |
|---|---|---|
| 01. சங்கானை | மா.குமாரதாஸ் | 50 |
| 02. சங்கானை | ஆ.இரத்தினசிங்கம் | 51 |
| 03. சங்கானை | சி.ரஞ்சகுமார் | 57 |
| 04. தெல்லிப்பளை | ச.சிவலிங்கம் | 109/1224 |
| 05. தெல்லிப்பளை | ப.இரத்தினம் | 110/844 |
| 06. தெல்லிப்பளை | மா.மோகனச்சந்திரன் | 114/1292 |
| 07. சுன்னாகம் | சி.ஜெகநாதன் | |
| 08. சுன்னாகம் | நா.ரவிச்சந்திரன் | |
| 09. சுன்னாகம் | நா.ரவிச்சந்திரன் | |
| 10. மானிப்பாய் | சி.அன்னலிங்கம் | |
| 12. மானிப்பாய் | கோ.செல்வநாயகம் | |
| 13. மானிப்பாய் | பொ.தனபாலசிங்கம் | |
| 14. பண்டத்தரிப்பு | தி.இந்திரசித்து | |
| 15. பண்டத்தரிப்பு | அ.அமலோற்பவநாயகம் | |
| 16. பண்டத்தரிப்பு | இ.வேதநாயகம் | |
| 17. கோண்டாவில் | அ.சின்னராசா | |
| 18. கோண்டாவில் | சி.சிவகுமார் | |
| 19. கோண்டாவில் | சீ.தெய்வேந்திரம் | |
| 20. காரைநகர் | ந.ஜெயக்குமார் | |
| 21. காரைநகர் | து.சந்திரன் | |
| 22. காரைநகர் | மு.பரமேஸ்வரன் | |

### சிறந்த பணியாளர்

| சங்கம் | பெயர் | பதவி |
|---|---|---|
| 01. சங்கானை | சி.மகேந்திரம் | கிளை முகா. |
| 02. சங்கானை | கா.யோகலிங்கம் | கிளை முகா. |
| 03. சங்கானை | தி.சிவயோகநாதன் | கிளை முகா. |
| 04. தெல்லிப்பளை | தி.சந்திரஞானம் | |
| 05. தெல்லிப்பளை | பா.பிரபாதரன் | |
| 06. தெல்லிபளை | சி.றஜீவன் | |
| 07. சுன்னாகம் | யா.இம்மானுவேல் | |
| 08. சுன்னாகம் | தி.சுரேஸ் | |
| 09. சுன்னாகம் | கா.இளங்கோ | |
| 10. மானிப்பாய் | க.குணரட்ணம் | |
| 11. மானிப்பாய் | செ.கனகலிங்கம் | |
| 12. மானிப்பாய் | சி.கணேசலிங்கம் | |
| 13. பண்டத்தரிப்பு | திருமதி.தி.பரமானந்தம் | |
| 14. பண்டத்தரிப்பு | ஆ.லூ.மரியநாயகம் | |
| 15. பண்டத்தரிப்பு | ஆ.அல்பிரட் | |
| 16. கோண்டாவில் | பி.டொமினிக் | |
| 17. கோண்டாவில் | த.மனோரஞ்சிதன் | |
| 18. கோண்டாவில் | அ.கவீந்திரன | |
| 20. காரைநகர் | மா.கோபாலகிருஸ்ணன் | |
| 21. காரைநகர் | பா.அற்புதமலர் | |
| 22. காரைநகர் | வே.அம்பிகைபாகன் | |
| 23. கொத்தணி | க.பாஸ்கரன் | |
| 24. கொத்தணி | இ.தர்மபாலன் | |
| 25. கொத்தணி | திருமதி.ச.லிண்டா- | |





அங்கத்தவர், பணியாளர் பிள்ளைகளில் பரீட்சையில் வெற்றிபெற்றவர்க்கான நிதியுதவி

தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சை

| சங்கம்:சங்கானை | வருடம் | தொகை |
|---|---|---|
| 01. பிரபாகரன்-சசிகரன் | -2007 | 2,000 |
| 02. தவப்பிரதாஸன்-நிசாந்தினி | -2007 | 2,000 |
| 03. விஜயகுமார்-கஜலக்சன் | -2008 | 2,000 |
| 04. மோகன்-சயந்தன் | -2008 | 2,000 |
| **சங்கம்:தெல்லிப்பளை** | | |
| 01. சிவஞானம்-கலைவாணி | -2007 | 2,000 |
| **சுங்கம்:சுன்னாகம்** | | |
| 01. ஆனந்தராசா-ரூபிகரன் | -2007 | 2,000 |
| 02. இராசேஸ்வரன்-சோபிகா | -2007 | 2,000 |
| 03. குணேந்திரன்-ஜனித்தா | -2008 | 2,000 |
| **சங்கம்:மானிப்பாய்** | | |
| 01. சந்திரபவன்-விதுர்சன் | -2008 | 2,000 |
| 02. ஜெயந்தகுமார்-மேனுசா | -2008 | 2,000 |
| **சங்கம்:கோண்டாவில்** | | |
| 01. உதயகுமார்-கிருசாந் | -2008 | 2,000 |
| 02. பிரபாகரன்-பிரவீனா | -2008 | 2,000 |
| 03. ஜெயசீலன்-விதுசா | -2008 | 2,000 |
| **சங்கம்:காரைநகர்** | | |
| 01. கிருபானந்தராசா-சோபனா | -2007 | 2,000 |



| சங்கம்:வலி.கொத்தணி | | |
|---|---|---|
| 01. பாஸ்கரன்-டான்சிகா | -2007 | 2,000 |
| 02. சத்தியசீலன்-அனோஜா | -2008 | 2,000 |
| 03. கதிர்காமலிங்கம்-டிதுர்சன் | -2008 | 2,000 |

க.பொ.த.(சா/த) சித்திபெற்று
க.பொ.த.(உ/த) தெரிவானோர்

| சங்கம்:சங்கானை | வருடம் | தொகை |
|---|---|---|
| 01. யோகசிங்கம்-ஜினித்தா | -2007 | 2,000 |
| 02. துரைசிங்கம்-நிசாயினி | -2007 | 2,000 |
| 03. முத்துலிங்கம்-சங்கீதா | -2007 | 2,000 |
| 04. கங்காதரன்-கமல்ராஜ் | -2007 | 2,000 |
| 05. முருகையா-குமுதினி | -2006 | 2,000 |
| 06. தேவராசா-துஸ்யந்தினி | -2007 | 2,000 |
| 07. தங்கராசா-சிறீமீரா | -2007 | 2,000 |
| 08. ஆறுமுகம்-செல்வச்சந்திரன் | -2008 | 2,000 |
| 09. ஆறுமுகம்-கிருஸ்ணவேணி | -2008 | 2,000 |
| 10. நாகராசா-தர்சினி | -2008 | 2,000 |




| சங்கம்:தெல்லிப்பளை | | |
|---|---|---|
| 01. யோகராசா-மைதிலி | -2007 | 2,000 |
| 02. மகாலிங்கம்-குகதீஸ்வரன் | -2007 | 2,000 |
| 03. மாணிக்கம்-சுதர்சன் | -2007 | 2,000 |
| 04. கந்தசாமி-சஞ்சீபன் | -2007 | 2,000 |
| 05. சிவராசா-தீபிஜா | -2007 | 2,000 |
| 06. அருணகிரிநாதர்-பிரசாந் | -2007 | 2,000 |
| 07. சிங்கராசா-நிறோசன் | -2007 | 2,000 |
| 08. மகேந்திரம்-நிலாணி | -2007 | 2,000 |
| 09. வரதராசா-கஜீபா | -2007 | 2,000 |
| 10. சிவலிங்கம்-றொபின்சன் | -2007 | 2,000 |
| 11. சிவராசா-கேசலா | -2007 | 2,000 |
| 12. தங்கராசா-தஜீந்தா | -2006 | 2,000 |
| 13. சக்திவேல்-சங்கீதன் | -2008 | 2,000 |
| 14. அண்ணாமலை-சுபாங்கி | -2008 | 2,000 |
| 15. அருணகிரிநாதர்-ஜெஜீபா | -2008 | 2,000 |
| 16. குணரத்தினம்-தனஞ்சன் | -2008 | 2,000 |
| 17. பாலசிங்கம்-கஜீபா | -2008 | 2,000 |
| 18. செல்வேந்திரம்-தர்சினி | -2008 | 2,000 |

(6ம் பக்கம் பார்க்க)

## வலிகாமம் ப.தெ.வ.அ.கூ.ச.கொத்தணி-சிறப்பு பக்கம்.....

5ம் பக்க தொடர்ச்சி

**சங்கம்:சுன்னாகம்**

| | | | |
|---|---|---|---|
| 01. | தர்மலிங்கம்-தனுஸ்வரன் | -2006 | 2,000 |
| 02. | துரைராசா-துஜிதா | -2006 | 2,000 |
| 03. | நாகேஸ்வரன்-கஜீந்தன் | -2006 | 2,000 |
| 04. | ஜெயராசா-கஜீதா | -2007 | 2,000 |
| 05. | ஜெயராசா-சுரைனா | -2007 | 2,000 |
| 06. | இராசன்-தர்சினி | -2007 | 2,000 |
| 07. | ஜெராட்-டென்சிராஜ் | -2005 | 2,000 |
| 08. | கதிரமலைநாதன்-கனீஸ் | -2007 | 2,000 |
| 09. | நித்தியானந்தம்-திசையானந்தன் | -2007 | 2,000 |
| 10. | தவயோகராசா-தர்சினி | -2006 | 2,000 |
| 11. | இராசன்-தர்சினி | -2006 | 2,000 |
| 12. | செல்வம்-சுதா | -2007 | 2,000 |
| 13. | முத்துலிங்கம்-பிரதீஸ் | -2007 | 2,000 |
| 14. | குணேந்திரம்-சாளினி | -2008 | 2,000 |
| 15. | சிவலிங்கநாதர்-வாருணி | -2008 | 2,000 |
| 16. | துரைசிங்கம்-அலக்சாண்டர் | -2008 | 2,000 |
| 17. | இரவிச்சந்திரன்-யஸ்ரின் | -2008 | 2,000 |
| 18. | முருகையா-பிருந்தா | -2008 | 2,000 |
| 19. | வாமதேவன்-நிலானி | -2008 | 2,000 |
| 20. | மைக்கல்அஞ்சலோ-கொண்சன்ரயின் | -2008 | 2,000 |

**சங்கம்:மானிப்பாய்**

| | | | |
|---|---|---|---|
| 01. | யோகராசா-சஜந்தினி | -2007 | 2,000 |
| 02. | மகேந்திரம்-நிறோஜன் | -2007 | 2,000 |
| 03. | குணரத்தினம்-திவ்விஜா | -2007 | 2,000 |
| 04. | பொன்ராசா-பிரதீப் | -2007 | 2,000 |
| 05. | தேவராசா-துஸாந்தன் | -2007 | 2,000 |
| 06. | தர்மலிங்கம்-மேகலா | -2007 | 2,000 |
| 07. | சிறிதரன்-சஜந்தன் | -2007 | 2,000 |
| 08. | உதயகுமார்-டிலானி | -2008 | 2,000 |
| 09. | சிவலிங்கம்-பியோனா | -2008 | 2,000 |
| 10. | சண்முகலிங்கம்-சுஜீகரன் | -2008 | 2,000 |
| 11. | கருணானந்தராசா-குசேந்திரன் | -2008 | 2,000 |
| 12. | குணரத்தினம்-திலக்சி | -2008 | 2,000 |
| 13. | இன்பராசா-ஜனனி | -2008 | 2,000 |
| 14. | ருசிகரன்-சுதர்சினி | -2007 | 2,000 |
| 15. | சந்திரசேகரம்-அர்ச்சினி | -2008 | 2,000 |
| 16. | உதயகுமார்-ஜனனி | -2007 | 2,000 |

**சங்கம்:பண்டத்தரிப்பு**

| | | | |
|---|---|---|---|
| 01. | மரியதாஸ்-தர்சிகா | -2007 | 2,000 |
| 02. | சிந்தாத்துரை-அஜந்தா | -2007 | 2,000 |
| 03. | அமலோற்பவநாயகம்-ஜெனிற்றன் | - 2007 | 2,000 |
| 04. | யோண்-அனுசா | -2006 | 2,000 |
| 05. | மனுவேல்-றெக்சிமனோன் | -2006 | 2,000 |
| 06. | ஜெராட்-சகாயலோசனா | -2006 | 2,000 |
| 07. | தேவதாஸ்-மேரிஅன்ரனீற்றா | -2007 | 2,000 |
| 08. | பத்திநாதர்-சஜீபன் | -2007 | 2,000 |
| 09. | அருளப்பு-டயானாநிறஞ்சினி | -2007 | 2,000 |
| 10. | குணரத்தினம்-கேசவன் | -2007 | 2,000 |
| 11. | மரியதாஸ்-தனுசாதஸ்மினி | -2006 | 2,000 |
| 12. | செபமாலை-துஸ்யந்தினி | -2006 | 2,000 |

**சங்கம்:சேோண்டாவில்**

| | | | |
|---|---|---|---|
| 01. | சிவனேசமூர்த்தி-தயாளினி | -2007 | 2,000 |
| 02. | செல்வராசா-ஜதீஸ்கண்ணா | -2007 | 2,000 |
| 03. | கனகராசா-பெனார்சன் | -2007 | 2,000 |
| 04. | இந்திரகுமார்-தினேஸ்குமார் | - 2007 | 2,000 |
| 05. | தனபாலசிங்கம்-தஜன்யி | -2007 | 2,000 |
| 06. | சிறீமன்மதராசா-துவாரகன் | -2007 | 2,000 |
| 07. | சின்னராசா-மிதுலா | -2008 | 2,000 |
| 08. | செல்வராசா-உமாயினி | -2008 | 2,000 |
| 09. | யோகேஸ்வரன்-பிருந்தா | -2008 | 2,000 |
| 10. | அருமைரத்தினம்-மயிதா | -2008 | 2,000 |
| 11. | குணசேகரம்-நிருபரன் | -2008 | 2,000 |
| 12. | கபீந்திரன்-சுபா | -2008 | 2,000 |

**சங்கம்:கொத்தணி**

| | | | |
|---|---|---|---|
| 01. | அல்பிரட்-சுரேக்கா | -2007 | 2,000 |
| 02. | கோடீஸ்வரன்-அகிலேஸ் | -2007 | 2,000 |

### க.பொ.த.(உ/த) சித்தியெற்று உயர்கல்வி கற்போர்

| | சங்கம்:சங்கானை | வருடம் | தொகை |
|---|---|---|---|
| 01. | நாகராசா-இருசாந்தினி | -2008 | 5,000 |
| 02. | துரைசிங்கம்-சங்கரதாஸ் | -2008 | 5,000 |
| 03. | பாலசிங்கம்-பகிர்பரன் | -2007 | 5,000 |
| 04. | பாலசிங்கம்-சுமித்திரா | -2007 | 5,000 |

**சங்கம்:தெல்லிப்பளை**

| | | | |
|---|---|---|---|
| 01. | மகேஸ்வரன்-கஜந்தன் | -2007 | 5,000 |
| 02. | தங்கராசா-தனுசன் | -2007 | 5,000 |
| 03. | தவராசா-பிரிந்தியா | -2007 | 5,000 |
| 04. | தவரத்தினம்-தவநேசன் | -2007 | 5,000 |
| 05. | குணராசா-சங்கர் | -2007 | 5,000 |
| 06. | குணராசா-பிரியதர்சினி | -2005 | 5,000 |
| 07. | சின்னராசா-பிரமிளா | -2006 | 5,000 |
| 08. | சிவஞானம்-மேகலா | -2007 | 5,000 |

**சங்கம்:சுன்னாகம்**

| | | | |
|---|---|---|---|
| 01. | தங்கராசா-சதீஸ் | -2006 | 5,000 |
| 02. | சந்திரவதனா-மஜீபன் | -2007 | 5,000 |
| 03. | ஜெராட்-ஜெரின்ராஜ் | -2007 | 5,000 |
| 04. | கனகரத்தினம்-வித்தியாவதி | - 2006 | 5,000 |
| 05. | செல்வம்-சங்கீதா | -2006 | 5,000 |
| 06. | நித்தியானந்தன்-பிறேம்நிசாந்தன் | -2007 | 5,000 |
| 07. | இரத்தினம்-அஜித்தா | -2003 | 5,000 |
| 08. | சுரேஸ்-நிரோசா | -2008 | 5,000 |

**சங்கம்:மானிப்பாய்**

| | | | |
|---|---|---|---|
| 01. | செல்வராசா-ரூபினி | -2007 | 5,000 |
| 02. | பொன்ராசா-தீபிகா | -2007 | 5,000 |
| 03. | நித்தியகுமார்-பிரியதர்சினி | -2007 | 5,000 |

**சங்கம்:பண்டத்தரிப்பு**

| | | | |
|---|---|---|---|
| 01. | இராசரத்தினம்-குகன் | -2007 | 5,000 |

**சங்கம்:கோண்டாவில்**

| | | | |
|---|---|---|---|
| 01. | மகேந்திரன்-துசந்தன் | -2007 | 5,000 |
| 02. | அருமைத்துரை-அனுதர்சினி | -2007 | 5,000 |

### உயர்கல்வி கற்று பட்டம் பெற்றோர்

| | சங்கம்:தெல்லிப்பளை | வருடம் | தொகை |
|---|---|---|---|
| 01. | மகேஸ்வரன்-துஸ்யந் | - 2007 | 5,000 |
| 02. | செல்வராசா-டெசிமாலா | - 2007 | 5,000 |
| 03. | சிவராசா-தர்சினி | - 2006 | 5,000 |
| 04. | நாகமுத்து-ஜெயவிந்தன் | - 2007 | 5,000 |
| 05. | கந்தையா-ஜெயபுஸ்பா | - 2007 | 5,000 |
| 06. | கந்தசாமி-சங்கீதா | - 2006 | 5,000 |

### க.பொ.த.(உ/த) சித்தியெற்று உயர்கல்வி கற்போர்

| | சங்கம்:பண்டத்தரிப்பு | வருடம் | தொகை |
|---|---|---|---|
| 01. | குணரத்தினம்-கமலினி | - 2008 | 5,000 |

# கவிதை இன்பம் தா!

உன்னுடன் உறவாடி
உன்னுறவில் மனம்நாடி
இன்னல்கள்தனை மறந்து
இருக்கின்ற காலமதில்
இருவரும் இணைந்து பெற்ற
இன்பங்கள் கொஞ்சமல்ல
அஞ்சாதே என்று சொல்வாய்
அன்புடன் எனை அணைப்பாய்
கற்பனை உலகமதில்
காலமெல்லாம் உன்னுடன்
களித்திருந்த வேளையது
உன் அன்பில் என்னையே
நான் மறந்து உவகையுடன்
இருந்த காலமது மாறியது
கவலைகளும் கூடியது

நீ என்னை விட்டு
நீண்டதூரம் சென்றதன்பின்
உன் நினைவின்றி நானிருந்தேன்
நிம்மதி நானிழந்தேன்
நீண்டகால இடைவெளி
மீண்டும் உன் நினைவு
என்மனதில் தோன்றியது
காலம் மாறலாம்
கன்னி உன் காதல் மாறாது
கவிதைக் காதலியே
என்மனது உன்னுறவை
நாடி நிற்கிறதே
என்னை நாடி வா
கவிதை இன்பம்
கோடிதா!

கே.எம்.தியாகராஜா,
கொடிகாமம்.

## ஒரு மாணவனின் இரவு!

உலகம் உருண்டையானது
கணினி மயமானது
என்னால் போட்டி போட்டு
பறக்க முடியவில்லை
நான்கு சுவருக்குள் நடுப்புத்தகத்துள்
நகரும் வாழ்க்கை—அதனால் விரித்த
புத்தகத்தை விட பரந்த ஆகாயத்தையே
என்மனம் அதிகளவுக்கு
அதிகமாய் விரும்பியது



என்முன்னால் ஏதோ முனகல்—
என்அக்காவின் குழந்தை
அழுகிறது விளக்கை
அணைக் கட்டுமாம்
தனக்கு சிறிது
ஓய்வு வேண்டு மாம் குழந்
தைகூட என்னிடம்
சொல்லும் நான் யாரிடம் சொல்ல?
எதைச்சொல்ல? ஆகாயத்தை
அண்ணாந்து பார்க்கிறேன்
விண்மீன்கள் கண்சிமிட்டுகின்றன
அதனை தனிமையில் ரசிக்கும்
மனநிலையில் நானில்லை
பரீட்சை நெருங்குகிறது
மீண்டும் நுழைகின்றேன்
ஓலைக்குடிசை வாசலின்
புத்தகத்துக்குள்ளே.....

-திருமதி பாரதிதாசன் தங்கமலர்-

# கவியின்பம்

## மழலையின் மகிழ்வு



அன்னையவள் தான்தந்த
அமுதத்தையே நான் சுவைத்து
காலெடுத்து வைக்கின்றேன்—என்
மகிழ்வான பருவமதில்
மலருகின்ற மொட்டுக்கள்
கதிரவனைக் காண்பதுபோல்
கண்விழித்து நோக்குகின்றேன்—என்
தாயவளின் வதனத்தை

வண்ணமலர் வதனமதில்
விழித்திருந்த கண்களிடை
காணுகின்றேன் என் வடிவை—நான்
கூறுகின்றேன் முதல் வார்த்தை

இவ்வண்ணம் மலர்ந்த எந்தன்
மழலைப் பருவத்தினில்
வைக்கின்றேன் முதல் அடியை—ஆனாலும்
வழுக்கியே விழுகின்றேன்
இவ்வாறு விழுந்த என்னை
பெற்றவர்கள் அரவணைக்க
மீண்டும் மீண்டும் நடக்கின்றேன்
மகிழ்வான பருவமதில்.....!

-சிவா-

## நெஞ்சுரம்

கவிதைக்கு களம் அமைத்த கற்பகம்
உன் வருகைக்கு காத்திருப்பேன் நித்தமும்
புதுமைக்கு கவி கொடுத்த பொக்கிஷம்
தமிழ் அன்னைக்கு தாழ் வணங்கி நித்தமும்
எதுகைக்கும் மோனைக்கும் இடையில்
புதுக் கவிதைக்கு உரம்கொடுத்த வித்தகம்
திறமைக்கு தீனிபோடும் அற்புதம்—உன்
முற்றத்தில் விதைக்கின்றேன் நெஞ்சுரம்

-வல்லைவாசன், அச்சுவேலி-

## சமூக, வாழ்வாதாரக் கட்டுமானப் பணிகளில் யாழ்.சித்த மருத்துவ உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்!

யாழ்.மாவட்ட சித்த மருந்துகள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் குறைந்த நிதிவளத்தைப் பயன்படுத்தினாலும் பலருக்கு வேலைவாய்ப்பினை வழங்கும் சிறந்த ஒரு கைங்கரியத்தை மேற்கொண்டு வருகிறது.

இச்சங்கம் பல்வேறுவகையான சித்தமருத்துவ உற்பத்திகளை மேற்கொண்டு வருகிறது. இவற்றில் மிகவும் குறிப்பிடத்தக்கதும் முன்னணியில் திகழ்வதும் **"கோபாம்"** எனும் வியாபாரப் பெயரில் கற்சரக்குகள், மூலிகைச் சரக்குகள் சேர்க்கப்பட்டு உற்பத்தி செய்யப்படும் பற்களுக்கு வலுச்சேர்க்கவல்ல மூலிகைப் பற்பொடியாகும். பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கள், ப.நோ.கூ.சங்கங்கள் மற்றும் தனியார் வர்த்தகர்களின் ஆதரவில் பத்தாவது அகவையை எட்டியிருக்கும் இப்பற்பொடியின் மாதாந்த விற்பனை சுமார் ரூபா ஒரு இலட்சத்திற்கும் அதிகமாகும் என இச்சங்கத்தின் முகாமைப் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி குருநாதன் ஸ்ரீகணநாதன் குறிப்பிடுகிறார்.

இதுபற்றி அவர் மேலும் தகவல் தருகையில், தற்காலத்தது வர்த்தக சமூகத்தின் பாவனையாளர்களை கவரும் வகையிலான வடிவமைப்பு, ப.நோ.கூ.சங்கங்கள் இதனை கொள்வனவு செய்வதில் காட்டுகின்ற அதிக ஆர்வம் மற்றும் கூட்டுறவுத் திணைக்களத்தின் ஆதரவு ஆகியனவும் இதற்கு கிடைக்கும் பட்சத்தில் விற்பனை இருமடங்காக அதிகரிக்கும் வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் வறுமை நிலையில் வாடும் குறிப்பிட்ட மக்கள் தொகுதியினரின் கிராமிய, பொருளாதார மேம்பாடு கருதி அதிக சிரமமின்றி வருமானத்தை பெற்றுக் கொள்ளக்கூடியதான வேலை வாய்ப்புக்களையும் இச்சங்கம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அச்சுவேலியில் 40 ஆயிரம் பனம் விதைகள் நாட்டப்பட்டன!

அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தனது சங்கத் தொழிற் பரப்பில் சுமார் 40 ஆயிரம் பனம் விதைகளை நாட்டியுள்ளதாக சங்கத்தின் பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார்.

பனை அபிவிருத்திச் சபையின் 10 இலட்சம் பனம் விதைகள் நடுகைத் திட்டத்தின் கீழ் இச்செயற்பாடு இடம்பெற்றுள்ளதாகவும், அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி, மேற்கு கிராம சேவையாளர் பிரிவுகளில் இப்பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டதாகவும் எதிர்வரும் காலங்களிலும் மேலும் பனம் விதைகளை நாட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.


## இப்பொழுது விற்பனையில்...



கணிணி மூலம் முறையில் வடிவமைக்கப்பட்டு, மிகவும் அழகிய அச்சிடப்பட்ட 2010ம் ஆண்டுக்கான வாக்கிய பஞ்சாங்க நாட்காட்டிகள் குறைந்த விலையில் எமது சமாசப் பதிப்பகத்தில் தற்போது விற்பனையாகிறது! அத்துடன் 2010ம் ஆண்டுக்கான அழகிய டயறிகளும் விற்பனையாகின்றன.

## எமது சமாசப் பதிப்பகத்தில்...

ஆய்வுக்கட்டுரைகள், ஆய்வு நூல்கள், சஞ்சிகைகள், நினைவு மலர்கள், மங்கள நிகழ்வுகளுக்கான அழைப்பிதழ்கள், மற்றும் அனைத்து வகையான பலவர்ண, கறுப்பு-வெள்ளை அச்சுப் பதிப்புக்களையும் விரைவாகவும், தரமாகவும், குறைந்த செலவில் அச்சிட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

## எமது சமாசத்தின் சேவைகள்

01. மாதாந்த ஒய்வூதியம் வழங்கும் திட்டம்.
02. கூட்டுறவுக் கல்விப் பயிற்சித் திட்டம்.
03. அங்கத்தவர், பணியாளர் பிள்ளைகளின் கல்வி ஊக்குவிப்புத் திட்டம்.
04. வருடாந்தம் சிறந்த அங்கத்தவரை தெரிவு செய்து தங்கப்பதக்கம் வழங்கி கௌரவித்தல்.
05. 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் வெற்றி பெற்றவர்க்கான நிதியுதவித் திட்டம்.
06. சித்தமருத்துவ இலவச சேவைக்கு நிதியுதவி வழங்கல்.
07. வெல்லமானியம் வழங்கி பனைவெல்ல உற்பத்தியை ஊக்குவித்தல்.
08. யாழ்.பல்கலைக்கழகத்தில் பனையியல் கற்கைநெறி மேற்கொள்ளும் மாணவர்களுக்கு ரூபா 10,000 வழங்கும் திட்டம்.
09. சுனாமி பாதிப்பு நிதி வழங்கல் திட்டம்.
10. விபத்து, மரணக் கொடைத்திட்டம், தொழிலின் போது மரணம் ஏற்படின் நிதி வழங்கலும், தொடர்ந்து இறந்தவரின் உரித்தாளிக்கு மாதாந்த ஒய்வூதியம் வழங்கும் திட்டம்.

**வடமாகாண ப.தெ.வள அ.கூ.சங்கங்களின் சமாசம்**
இல.52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.

T.P: 0212225072

**சமாசப் பதிப்பம்**
499, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு இல.52, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2009ம் ஆண்டு நவெம்பர் மாதம் வெளியிடப்பட்டது.